
www.tamilarangam.net

# ஈழச்செய்தி

வெளியீடு: 18 மார்கழி: 1990




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரிய சம்பவங்களில்லை; மட்டக்களப்பில் இருவர் பலி

[பால விவேகானந்தா]

நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் நேற்று நண்பகல் வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பாரிய அசம்பாவித சம்பவம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பேசாலையிலும் தலைமன்னாரிலும் பாதுகாப்பு படையினர் தடையகற்றும் பணிகளில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் பாதுகாப்பு படையினருக்கு தகவல் கொடுப்பவர் எனக் கருதப்படும் நவரத்தினராசா என்ற நபர் சனிக்கிழமை மாலை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் இருந்து 400 யார் தொலைவில் புலிகளால் சுடப்பட்டதாகவும் இப்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனையில் புலிகள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் லைஹஏஸ் வான் ஒன்று படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

மன்னார் பேசாலையில் "ஜொனி" ரக கண்ணிவெடிகள், யூரியா கலன்கள், வெடிமருந்துகள், வி. எச். எவ். அன்டெனா, வயர் சுருள்கள், பிளாஸ்டிக் கலன்கள் ஆகியவை படையினரால் கைப்பற்றப்பட்டன.

தலைமன்னாரில் புலிகளால் கைவிடப்பட்டுச் செல்லப்பட்ட பதுங்கிடம் ஒன்றிலிருந்து அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களை கைப்பற்றிய படையினர் அவற்றை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

கரடியனாறு பகுதியில் வி. நடராஜா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதாயும் இதனை புலிகள் செய்ததாக கருதப்படுவதாயும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'வட கிழக்கில் அமைதி ஏற்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்'

## -நவரத்தினம் எம் பி.

(சபை செய்தியாளர்கள்)

''வடக்கு-கிழக்கில் விரைவில் அமைதி ஏற்பட வேண்டுமென விரும்புகிறோம். வட-கிழக்கின் அபிவிருத்திக்கான திட்டங்கள் இப்போது தொடக்கம் தீட்டப்பட வேண்டும். வாழைச்சேனை கடதாசி ஆலைத் தொழிற்சாலையையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்'' என கே. நவரத்தினம் (த. வி. கூ.) எம்.பி. பாராளுமன்றத்தில் கூறினார்.

உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம்மீது பேசிய அவர் மேலும் கூறியதாவது:

''வடக்கு-கிழக்கில் இப்போது உற்பத்திகள் இல்லாமலேயே இரட்டை வரிகளை செலுத்த நேரிட்டுள்ளது. அரசாங்கத்துக்கு ஒரு வரி, வடக்கு-கிழக்கை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மற்றொரு அரசுக்கு மற்றவரி.

மன்னாரை வளம்படுத்தி அபிவிருத்தி செய்திருந்தால் பெற்றோலிய பொருட்கள் பல அங்கு கிடைத்திருக்கும். ஈராக் விவகாரம் தொடர்பாக நாம் பாதிக்கப்பட்டிருக்க மாட்டோம்.

வடக்கு-கிழக்கிலுள்ள தொழிற்சாலைகள் பல குண்டுகளால் தகர்க்கப்பட்டுள்ளன. இந்நிலையில் உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்படியிருக்க உற்பத்தி தீர்வையை இப்பகுதிகளில் பெறுவது எப்படி?

எமது நாட்டில் நீர் இல்லையா? நிலவளம் இல்லையா? திறமைசாலிகள் இல்லையா? நாம் ஏன் மற்றவர்களிடம் கையேந்தவேண்டும்.

அன்று இருந்த அரசு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியதால் வடக்கு-கிழக்கில் உற்பத்தி பெருகியது. கைத்தொழில்கள் அபிவிருத்தி அடைந்தால் வேலைவாய்ப்பு கூடும். வருமானமும் அதிகரிக்கும். இளைஞர் பிரச்சினையும் தீரும். இளைஞர்கள் தனியாக விடப்பட்டால்தான் பிரச்சினைகள் கூடும்.

உற்பத்தி வரியை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்கு வரிவிதிக்க வேண்டும். சாதாரண பொருட்களுக்கு வரி விதித்தால் வாழ்க்கைச் செலவு கூடும்.

சீனி இறக்குமதியைக் கட்டுப்படுத்தினால் 50 சதவீத இனிப்புப் பொருட்களை பனம் கட்டியிலிருந்து தயாரிக்கலாம்.

வட-கிழக்கில் உள்ள சகல தொழிற்சாலைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும்'

# 'நாடு பிளவுபடுவதை தடுக்க மாகாண சபைக்கு உயிரூட்டுங்கள்'

## சபையில் அத்தாவுட செனவிரத்ன

[எம் பி. எம் அஸ்ஹர், வி. தனபாலசிங்கம்]

"நாடு பிளவுபடாமல் தடுக்க வேண்டுமானால் மாகாண சபைக்கு உரிய அதிகாரம் கொடுத்து நிர்வாகத்தைச் சீராக்க வேண்டும்" என திரு. அத்தாவுட செனவிரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"எல்லோரது கருத்தையும் ஒருபோதும் ஒன்றாக்க முடியாது. எனவே மாகாண சபைக்கு அதிகாரம் வழங்குவதில் கருத்து வேறுபாடு இருந்தாலும் அரசு பின்வாங்கக் கூடாது" என்றும் திரு. அத்தாவுட செனவிரத்ன கூறினார்.

அரசு ஒத்துழைக்காததால் தான் வட - கிழக்கு மாகாண சபை செயலிழந்தது. வரதராஜ பெருமாள் விரக்தியடைந்தே நாட்டை விட்டகன்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

எல். ரீ. ரீ. ஈ தவிர்ந்த ஏனைய குழுக்கள் மாகாண சபை முறையை ஏற்றன. ஆனால் அரசு இக் குழுக்களை ஏமாற்றி விட்டது. இக் குழுக்களை அரசு நம்ப வேண்டும். மாகாண சபைக்கு மீண்டும் உயிரூட்ட வேண்டும்.

"மாகாணசபை முறையை ஏற்படுத்தியாகி விட்டது. எனவே அதனை இயக்க வேண்டும். அதற்கு அதிகாரத்தை வழங்க வேண்டும். இல்லையேல் நாடு பிளவுபடும். ஜனநாயகத்தை நாம் பாதுகாக்க வேண்டும். எல்லோரும் ஜனநாயகத்தை அனுபவிக்க இடமளிக்க வேண்டும்.

அதிகாரம் பன்முகப்படுத்தப்படாவிடில் பிரச்சினைகள் தீரமாட்டா. தமிழ் மக்களின் விரக்திகள் பெருகும்.

# வெற்றிலைச் செய்கை வடக்கே முற்றாக பாதிப்பு

## ஒரு வெற்றிலை 50 சதம்

நல்லூர்,

வடபகுதிப் பொதுச் சந்தைகள், கடைகளில் ஒரு வெற்றிலை 50 சதமாக விற்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்குப் பகுதியில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் மாவிட்டபுரம், வீமன்காமம், பலாலி, இளவாலை ஆகிய பகுதிகளில் வெற்றிலைச் செய்கை முற்றாக அழிந்துள்ளது.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் கோயில் விழாக்களில் வெற்றிலைக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தக்காளி, மிளகாய் முதலிய தோட்டங்களும் அழிந்துவிட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித உரிமைமீறல்களுக்கு கனடா கவலை

(நமது நிருபர்)

கனடா வெளிவிவகார ராஜாங்க செயலாளரான ஜோ கிளார்க் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்களையிட்டுத் தமது கவலையைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் உணவு மற்றும் மருந்துத்தட்டுப்பாடு அதிகரித்து வருவதன் காரணமாக, பொதுமக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

சமீபத்திய சில மாதங்களாக பொதுவான மனித உரிமை நிலைமையில சிறு முன்னேற்றம் இருக்கின்றபோதும், சட்டத்திற்கு மதிப்பளிக்கவும், மனித உரிமைக்கு கேடு விளைவிப்போரை நீதிக்கு முன் நிறுத்தவும் பெரும் கடமைப்பாடு தேவை என்பது வெளிப்படையாகிறது. முறையாக அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு என்ற வகையில், உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதும், ஒழுங்கில் ஏனையோருக்கு முன்மாதிரியை உருவாக்குவதுமான இறுதிப் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கே உரியது.

இலங்கை அரச படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது கடும் மோதல் ஏற்பட்டுவருவதினால், குறிப்பிடத்தக்க அளவு சிவிலியன்கள் வடபகுதியில் இருந்து வெளியேறியுள்ளனர். உணவு மற்றும் மருந்து விநியோகத்தை மேற்கொள்ளுவது மிகவும் கஷ்டமாகி வருகிறது. சிவிலியன்கள் பட்டினியாலும், வைத்திய சேவைகள் போதியளவு இல்லாததாலும் கஷ்டமடைகின்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு மூலம் வடபகுதிக்கு இலங்கை அரசு உணவையும் மருந்துப் பொருட்களையும் அனுப்புவதை உறுதிப்படுத்த வேண்டும்.

சிவிலியன்களின் நலனைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் இம்மனிதாபிமான முயற்சிகளுக்கு எல். ரீ. ரீ. ஈ. தடையாக இருக்கக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இலங்கையின் வட-பகுதியில் மனிதாபிமான விடயங்களில் மிகவும் பாரதூரமான ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். தற்போதைய மோதலுக்கு அப்பாவி மக்கள் பலியாகாதிருப்பதை உறுதிப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மிகப்பொருத்தமான வழிகளாக பேச்சுவார்த்தைக்கு இருதரப்பினரும் முன்வந்து, வடக்கு-கிழக்கு சிவிலியன்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோருகிறேன்.

# மன்னார் முஸ்லிம்கள் வெளியேற்றம்?

(பால. விவேகானந்தா)

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்ட காங்கேசன்துறை, பலாலி பகுதிகளில் படையினர் வீதித் தடையகற்றல், கண்ணிகள் அகற்றல் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

இந்த நடவடிக்கைகளின் போது இரு இராணுவத்தினர் காயமுற்றனர்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களால் மன்னாரிலிருந்து வெளியேறிய சுமார் ஆயிரம் முஸ்லிம்கள் சிலாவத்துறை இராணுவ முகாமைச் சென்றடைந்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கிருந்து வெளியேறும் முஸ்லிம்கள் ரூபா 500க்கு மேல் பெறுமதியான பொருட்கள் எதனையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லையெனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

அம்பாறை பொலிஸார் கல்முனை அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மீது குற்றம் புரிந்த தான குற்றச்சாட்டின் மீது ஒரு பொலிஸ்காரர், ஒரு ரிசேர்வ் பொலிஸ்காரர், ஒரு ஊர்காவல் படை வீரர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்காரர் கடமையிலிருந்து இடை நிறுத்தப்பட்டதுடன் ஏனைய இருவரும் சேவை நீக்கப்பட்டுள்ளனர்.



மட்டக்களப்பு

# களஞ்சியத்தில் நிவாரணப் பொருட்கள் தேக்கம்!

## யாழ். எம். பி. சுரேஷ் கண்டனம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளுக்கு வழங்கவென அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் மட்டக்களப்பு கச்சேரி நிர்வாகத்திலிருக்கும் களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அரச ஊழியர்களின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என ஈ.பி. ஆர்.எல்.எப் யாழ். மாவட்ட எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தேங்கிக் கிடக்கும் பொருட்களில் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டிய விட்டாமில்க் 790 டின், லக்ஸ்பிறே–1019 பக்கட், டென்ட்–11, குடும்பத்திற்குரிய பொதிகள் –650, சமையல் பாத்திரங்கள்–375, பெரிய சோஸ்பன்–12, கர்ப்பிணி தாய்மார்களுக்கான திரிபோஷ–875 பக்கட், பயறு 1975 கிலோ, பருப்பு–200 கிலோ, பெட்சீட்–180, பிஸ்கட்–25 பெட்டி, தரம்புத்தடி–25 என்பவை அடங்குகின்றன. ஏற்கனவே பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சீரான முறையில் நிவாரணம் கிடைக்காத நிலையில் இவ்வாறு நிவாரணப் பொருட்கள் மக்களை சென்றடையாமல் தேங்கிக் கிடப்பது மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதைப் புரிந்து கொண்டு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தாமதமின்றி அரச அதிகாரிகளை இந் நிவாரணப் பொருட்களை வழங்க பணிப்புரைவழங்கி இவர்களுக்கு இப் பொருட்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் இம் மாவட்டத்தில் இன்னுமொரு குறைபாட்டையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. கொழும்பிலிருந்து வாழைச்சேனை வரை மட்டுமே மட்டக்களப்புக்கான ரயில் சேவை நடத்தப்படுகிறது. வாழைச்சேனையில் வந்திறங்கும் பயணிகளுக்கு மட்டக்களப்பு செல்வதற்காக ஒரு பஸ் வண்டியே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. ரயிலில் பயணம் செய்யும் மக்களுக்கு இப் பஸ் சேவை போதாது. இதனையும் முக்கிய பிரச்சினையாக கருத்திற் கொண்டு கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை மேலதிகமாக இன்னும் இரு பஸ் வண்டிகளையாவது சேவையில் ஈடுபடுத்தி பயணிகளின் வாழைச்சேனை – மட்டக்களப்பு பிரயாண ஒழுங்கை சீர்ப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மட்டு., அம்பாறை பகுதியில் 1900 பேர் தொடர்பாக எந்த தகவலும் இல்லை

### பிரேமச்சந்திரன் எம்.பி. அறிக்கை

(அன்டன் எட்வேர்ட்)

கடந்த ஜூன் மாதம் மோதல் ஆரம்பமானதன் பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 1900 பேர் வரை காணாமல் போயிருக்கிறார்கள். அப்பகுதி பிரஜைகள் குழு, சமாதானக் குழுக்களிடமிருந்து இந்த தகவல் கிடைத்துள்ளது என்று ஈ.பி.ஆர்.எல். எப்- செயலதிபர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம். பி. தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் "மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் காணாமல் போன கூடுதலானவர்கள் பற்றி தகவல் தெரியாமல் உள்ளது.

"இது குறித்து அரசாங்கத்தினதும், பாதுகாப்பு அமைச்சினதும் கவனத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

"காணாமல் போனோரில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்புப் பிரிவினராலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வந்தாறுமூலை அகதி முகாமில் கைதானவர்கள் தொடர்பாக எதுவித தகவலும் இல்லை. சிலர் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டதாயினும் அவர்களை நேரில் பார்த்ததாக யாருமில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 1100 பேர் பற்றி தகவல் இல்லை. அம்பாறை மாவட்டத்தில் 800 இற்கு மேற்பட்டவர்களின் தகவல் இல்லை. பிரஜைகள் குழு, சமாதானக் குழுக்களின் மூலம் காணாமல் போனவர்களின் பெயர்ப் பட்டியலை தயாரித்து வருகிறோம்"

இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## தமிழரை குடியமர்த்தும் பணி ஆமை வேகத்தில்

### திருமலை சென்று திரும்பிய தமிழ் கட்சிகள் புகார்

(அன்டன் எட்வேர்ட்)

திருமலை பகுதியில் அகதிகளாகியுள்ள சிங்கள மக்களின் வீடுகள் புனரமைக்கப்பட்டு, பழைய இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஆனால் தமிழர்களின் வீடுகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆமை வேகத்தில்தான் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திருமலை சென்று திரும்பிய தமிழர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு குறை தெரிவித்தனர்.

நகரத்தில் சேதப்படுத்தப்பட்ட வீடுகள் தற்போது தீவிர வேகத்தில் விசேட தொண்டர் படைகள் திருத்தி அமைத்து வருகின்றனர். இதன் காரணமாக அகதி முகாம்களில் இருந்து சிங்கள மக்கள் பழைய இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வீடுகளைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஒரு சில வீடுகளே திருத்தப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சர்கள் அரசியல் கட்சிகளின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் முறையிடப்படவுள்ளது.

தமிழ் மக்கள் உள்ள அகதி முகாம்களில் உணவு விநியோகத்தில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்க் கட்சி பிரதிநிதிகள் கூறினர்.

---

## திருக்கோவில் அகதிகள் மழையினால் பெரும் கஷ்டம்

### —கைதானோரை மீட்க பெண்கள் இராணுவ முகாம் வாசலில் காவல்

அக்கரைப்பற்று,

திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைக் கட்டிடங்களில் தங்கியிருக்கும் அகதிகள் தற்போது பெய்து வரும் மாரி மழையினால் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

கட்டிடங்களில் நெரிசல் ஏற்பட்டிருப்பது ஒருபுறமிருக்க சமையல் செய்வதற்கு விறகுமின்றி இடமுமின்றி அவர்கள் திண்டாடுகின்றனர். அரச நிவாரண உதவிகள் போதாமல் இருப்பதாலும் வெளியிடங்களுக்குச் சென்று ஏதாவது தொழிலை செய்ய முடியாமலிருப்பதாலும் இந்த மக்களுக்கு பெரும் பணக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தினால் வயிற்றோட்ட நோய் அகதி முகாமில் மட்டுமன்றி கிராமங்களிலும் பரவியுள்ளது. உரிய சிகிச்சை கிடைக்காததனால் அண்மையில் திருக்கோவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை ஒன்று உயிரிழந்தது.

தொடர்ந்து மழை பெய்து கொண்டு வருவதனால் திருக்கோவில் பகுதியிலுள்ள அகதிகளை வசதியான வேறிடங்களுக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள பாடசாலைகள் தொடர்ந்து செயல்படாமல் உள்ளன. அகதிகள் பாடசாலைகளை விட்டு வெளியேறிய பின்னர்தான் வகுப்புகளை ஆரம்பிப்பது சாத்தியம் என அதிபர்கள் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் 311 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 60 தமிழ்ப் பாடசாலைகள் உள்ள பிரதேசங்களில் மக்கள் இல்லை. 30 பாடசாலைகளில் அகதிகள் தங்கியுள்ளனர்.

இங்குள்ள பொதுமக்களில் ஆண்களை அகதி முகாம்களிலும் பெண்களை இராணுவ முகாம்களிலும் அதிகமாக காணக்கூடியதாக உள்ளது.

காணாமல் போனோரையும் கைது செய்யப்பட்டோரையும் மீட்டுத் தருமாறு கேட்பதற்காகவே பெண்கள் பலர் படை முகாம் வாசல்களில் காத்துக் கிடக்கின்றனர்.

---

### பாதுகாப்பு வழங்கி

## முஸ்லிம்களை வடக்கிலேயே குடியமர்த்த வேண்டும்

### யாழ். எம்.பி. நவரத்தினம் வலியுறுத்து

(பாராளுமன்ற செய்தியாளர்கள்)

வடக்கிலே சகோதரர்கள் போல எங்களுடன் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் இன்று அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை இவ்வாறே போனால், வடக்கில் தமிழர்களும் வாழ முடியாத சூழ் நிலை உருவாகும் என யாழ்ப்பாண மாவட்ட தமிழர் விடுதலை கூட்டணி எம்.பி. கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மொத்த விற்பனை வரி (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நவரத்தினம், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறுவதை தடுத்து, அவர்களுக்கு அங்கேயே பாதுகாப்புவழங்கி குடியமர்த்த வேண்டும். அல்லாவிட்டால், பாதுகாப்பில்லாத சூழ் நிலையில் தமிழர்களும் அங்கிருந்து வெளியேறுவர் என்றும் சுட்டிக்காட்டினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'அரசியல் தீர்வு ஒத்திவைக்கப்படும் வரை இன்றைய துயர சம்பவங்கள் தொடரவே செய்யும்'

## வட - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் வேண்டும் என ஈ. பி. ஆர். எல். எப். கோருகிறது

[நமது நிருபர்]

வட-கிழக்கில் ஓர் இடைக்கால நிருவாகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தி ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் அரசியல் செயலாளர் எம். கே. ராஜா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட-கிழக்கிற்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா எம். பி. நாடாளுமன்றத்தில் பேசியிருப்பதை ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வரவேற்கிறது. அவ்வாறு ஏற்படுத்தப்படும் நிர்வாகமானது, அரசு இயந்திரம் சுமுகமாக இயங்குவதற்கும், அகதிகளின் துயர்களை குறைப்பதற்கும் பேருதவியாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தன்னிச்சையாக வட - கிழக்கு மாகாண சபையைக் கலைத்த நாட்தொட்டே ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தான் ஈ. என். டி. எல். எவ். பின் கோரிக்கையாக இருந்துள்ளது. வட-கிழக்கில் ஒரு அரசியல் சூன்ய நிலை-உருவாக்கப்பட்டதானது மேலும் பிரச்சினையையும், சிக்கல்களையும் ஏற்படுத்துவதோடு அப் பிராந்தியத்திற்கான அரசியல் மாற்றம் ஒத்திவைக்கப்பட்டால் பல துயர நிகழ்வுகளுக்கே அது இட்டுச் செல்லும் என்று நாம் அன்று தொட்டே எச்சரித்து வந்துள்ளோம். அது இப்போது நிரூபணமாகி விட்டது.

### தமிழ் கிராமங்கள்

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் வட- கிழக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். கிழக்கில் பல தமிழ் கிராமங்கள் தாக்கப்பட்டுள்ளதோடு, நூற்றுக் கணக்கான அக்கிராமவாசிகள் துப்பாக்கியால் சுடப்பட்டும், வெட்டியும், கொலை செய்யப்பட்டுள்ளனர். இப்போது வடக்கில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் பலவந்தமாக அவர் தம் வீடுகளிலிருந்து துரத்தப்படுகின்றனர். இந்த அநாகரிகமான செயலைக் கண்டிக்கும் அதே வேளையில் வட-கிழக்கில் வாழும் (சிறுபான்மை இன) தமிழ் மற்றும், முஸ்லிம் மக்களை தாக்கி அவர்களை அவர் தம் சொந்த நாட்டினிலேயே அநாதரவானவர்களாக்கும் நடவடிக்கையில் ஒரு ஒற்றுமை காணப்படுவதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மத்தியில் போலவே மாகாணத்திலுமுள்ள அரசியல்வாதிகளின் அதிகாரப் போட்டியினால் அப்பாவி மக்கள்- அவர்கள் எவ்வினத்தவர்களானாலென்ன அநாதைகளாக்கப்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

### துயரங்கள் தொடரும்

வட- கிழக்கிற்கான அரசியல் தீர்வு மேலும் ஒத்திவைக்கப்படும் வரை இன்றைய துயர சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஜனாதிபதி விரும்பினால், நாடாளுமன்றத்தில் அவரது கட்சியிலுள்ள பெரும்பான்மை பலத்தோடும், அவருக்குள்ள முற்றுமுழுதான நிறைவேற்றதிகாரங்களோடும் ஒரு தீர்வை ஏற்படுத்த முடியும். என்றும் நாம் நம்புகின்றோம்.

ஆரம்பத்தில் இனப்பிரச்சினை என்பது சிங்கள, தமிழ் மக்களிடையிலானதாகவே இருந்தது. ஆனால் இப்போது பிரச்சினையானது இரண்டு சிறுபான்மை இனங்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலானது என்பது போல் காட்டப்படுகின்றது. வட-கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இக்கால கட்டத்தில் இவ்விதமான புதிய போக்கும், வன்முறைகளின் அதிகரிப்பும் ஆபத்தானதும், குழப்பத்தை ஏற்படுத்துவதுமேயாகும்.

அதிகரித்து வரும் வன்முறைகளைக் குறைப்பதற்கும், மக்களுக்கு - குறிப்பாக அகதிகளுக்கு- உதவுவதற்கும் ஒரே வழி வட- கிழக்கிற்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதேயாகும். இதற்காக நாம் பின்வரும் காரணிகளை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இன்று வட- கிழக்கு மக்கள் அணுகி தமது குறை தீர்ப்பதற்கான சிவில் நிர்வாகம் இல்லை.

நாள் தோறும் அகதிகளின் எண்ணிக்கை பன்மடங்காகி வருகிறது.

அரசு உத்தியோகத்தரின் பற்றாக்குறை நிலவுகின்றது. பலர் வேலைக்கு வரவே அஞ்சுகிறார்கள். வேலைக்கு சமுகம் தருபவர்களாலும் தமது வேலைகளை நிறைவேற்ற முடியவில்லை.

இராணுவத்தாலும் அரசு உத்தியோகத்தர்களாலும் பயங்கரவாதிகளையும் அவர் தம் நடமாட்டங்களையும் இனம் காண முடியாதுள்ளது.


கிழக்கு மாகாணத்தின் சமீப நிகழ்வுகள், இன ரீதியில் நிறுவப்பட்ட ஊர் காவல் படையினர் படுகொலைகளுக்குப்பின்னாலிருந்துள்ளனர் என நிரூபித்துள்ளன.

எனவே கலைக்கப்பட்ட வட- கிழக்கு மாகாண சபையின் இடத்திற்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது வட- கிழக்கில் நிர்வாகத்தை ஏற்படுத்தி நடத்த அரசுக்கே உதவியாக அமையும்.

# 'யுத்தநிறுத்தத்தை புலிகள் இருதடவை நிராகரித்தனர்'

(நமது நிருபர்)

ஒரு உடனடி யுத்த நிறுத்தத்தை ஏற்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் மத்தியஸ்தத்திலான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசை பிரிட்டிஷ் அரசாங்கம் கோருவது பொருத்தமாக இருக்காது என பிரிட்டிஷின் தென் கிழக்காசிய பிரிவுக்கு பொறுப்பான வெளிநாட்டலுவலக அமைச்சர் லெனக்ஸ் போய்ட் சமீபத்தில் காமென்ஸ் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.



சேர் டேவிட் ஸ்டீல் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் புதிய மோதல்கள் ஆரம்பத்திலிருந்து இலங்கை அரசு இருதடவை யுத்த நிறுத்தத்திற்கு பிரேரித்தது ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் அதனை நிராகரித்து விட்டனர். இச் சூழ்நிலையில் கோரிக்கைகள் பொருத்தமாக இருக்காது என்றார்.

உடனடி யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்று ஐ. நா. செயலாளர் நாயகத்தின் மத்தியஸ்தத்துடனான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இலங்கைஅரசை பிரிட்டிஷ் அரசு கோருமா என சேர்டேவிட் ஸ்டீல் கேள்வி எழுப்பியிருந்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இடம் பெயர்ந்து காட்டுப் பகுதியில் வாழும் மட்டுநகர் மக்களின் எதிர்காலம் என்ன?

மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவமழை ஆரம்பமாகி தொடர்ந்து பெய்து கொண்டு வருகின்றது. தம் சொந்த வீடு வாசல்களை இழந்த காடுகளில் மர நிழல்களிலும் சிறு சிறு வைக்கோல் குடிசைகளிலும் வாழும் மக்களின் எதிர்காலம் என்ன? மழையால் ஏற்படும் குளிரை குழந்தைகள் உட்பட அனைவரும் எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறார்கள்? உடல் விறைத்து இறந்து விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

மட்டக்கள்ப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் அற்ற பிரதேசமாக ஊறணி முதல் வாழைச்சேனை வரையுள்ள இருபது மைல் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கடந்த 13—08—90 ஆம் திகதி முதல் இடம்பெயரத் தொடங்கினர்.

இடம்பெயர்ந்து மக்கள் பாதுகாப்புக் கருதி வந்தாறுமூலை பல்கலைக்கழகம். சித்தாண்டி முருகன் ஆலயம், கிரான் ஆச்சிரமம், கோரகல்லிமடு பாடசாலை பாலையடித்தோணா ஆகிய நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வந்தனர். இதில் 46000 மக்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்திலேயே மிகப் பெரிய முகாமாக கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை இடம்பெயர்ந்தோர் முகாம் காணப்பட்டது.

பல அசௌகரியங்கள் காணப்பட்ட போதும் மக்கள் மேற்கூறிய முகாம்களில் வாழ்ந்து வந்தனர். இதனால் சுகாதார மருத்துவம், உணவு மற்றும் இன்னோரன்ன சேவைகளை வழங்குவதில் அரசாங்க அதிபர் ஆர். யோகநாதன் துரித நடவடிக்கை எடுத்து வந்தார்.

இதன்படி வைத்தியசாலை. உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், தபாற் கந்தோர். உணவு பண்டகசாலை போன்ற பல சேவை நிலையங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிலையிலே கடந்த 30—09—90 ஆம் திகதி முதல் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் ஏனைய மூன்று முகாம்களில் இருந்தும் மக்கள் திடீரென எழும்பத் தொடங்கினர் இதனால் முகாம்கள் வெறிச்சோடின. அப்பகுதிகளுக்கு பொருட்களைக் கூட எடுத்துவர போக முடியாத நிலை காணப்பட்டது.

மேற்குறித்த நான்கு முகாம்களிலும் ஏறக்குறைய 60,000க்கும் அதிகமான மக்கள் இருந்தனர். இதில் கிழக்கு பல்கலைக் கழகத்தில் மட்டும் 46000 பேர் தங்கியிருந்தனர்.

மொத்தத் தொகையில் 25 வீதத்திலும் குறைவானோர் மட்டக்களப்பு நகரத்துக்கு வந்துள்ளனர். மேலும் சிறு தொகையினர் தேவபுரம், களுவங்கேணி, பாலையடித்தோணா ஆகிய முகாம்களுக்குச் சென்றுள்ளனர். எஞ்சிய பகுதியினர் ஏறக்குறைய 40,000க்கும் அதிகமான மக்கள் செங்கலடி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள காட்டுப் பகுதிகளுக்கும் வயல் பகுதிகளுக்கும் சென்றுள்ளனர்.

உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் எதிர்காலம் இருண்ட இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் காடுகளில் இன்று வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மயிலவட்டுவான், சந்தனமடு. திகிலிவட்டை போன்ற பகுதிகளிலே மக்கள் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மர நிழலிலே தங்கியிருந்தனர் வேறு சிலர் வைக்கோல் இலுக்குப்புல் ஆகியவற்றால் வேயப்பட்ட சிறு சிறு குடிசைகளை அமைத்துள்ளதாகவும் அதிலே இரவுப் பொழுதை கழிப்பதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

சந்தனமடு ஆறுகள் பெருக்கெடுத்தால் இந்த மக்களின் கதி என்ன என்று எண்ணும் போது பெரும் அச்சமே நிலவுகிறது.

மேலும் குழந்தைகளுக்கு தேவையான பால் உணவு கிடைப்பதில்லை. கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கான உணவுகள் இல்லை. குழந்தைகள் ஒட்டிய வயிற்றுடன் காணப்படுவதுடன் மாற்றி உடுக்க உடையின்றி அல்லல் படுவதாக அங்கிருந்து வருவோர் கூறுகின்றனர்.

மேற்குறித்த காட்டுப் பகுதிகளில் சுகாதார மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு நிறுவன ரீதியான எந்த அமைப்புக்களோ சேவை நிலையங்களோ காணப்படவில்லை. இந்த நிலை ஒருபுறமிருக்க மறுபுறம் குறித்த புலுட்டுமான்ஓடை, திகிலிவட்டை போன்ற பகுதிகள் "மலேரியா நோய் வலயம்" என்று சுகாதாரத் திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இங்கு கடந்த நான்கு மாதங்களாக மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை.

திகிலிவட்டை குடும்பிமலை போன்ற பல பகுதிகளில் உள்ள மக்களுக்குரிய உணவுப் பொருட்களை கிண்ணையடியில் வைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் மக்கள் தங்கி வாழுவதற்கு தற்காலிகமாக கூடாரம் அமைப்பதற்கு தேவையான கூடாரங்கள் சில தற்போது கையிருப்பில் உள்ளதாகவும் காடுகளிலும் வயல்களிலும் சிதறி வாழும் மக்களை எவ்வாறு ஓரிடப்படுத்தி கூடாரத்தை வழங்குவது என்ற பிரச்சினை உள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேற்குறித்த காட்டுப் பகுதிகளுக்கு சமூக நிறுவனங்கள் செல்லுவதற்கு தயக்கம் காட்டி வருவதாகக் கூறப்படுகின்றது. இப்பகுதியில் உள்ள சில இடங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மட்டும் சென்று வந்துள்ளனர். அவர்களே இடம்பெயர்ந்தோரின்பட்டியல்கள் சிலவற்றையும் எடுத்து வந்து அரச அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இடம்பெயர்ந்தோரில் அரச அலுவலகர்கள், பாடசாலை மாணவர்கள், ஓய்வூதியம் பெறுவோர், தர்மப் பணம் பெறுவோர், உணவு முத்திரைக்கு பொருள் பெறுவோர் என்ற பலதரப்பட்டோர் காணப்படுகின்றனர்.

காடுகளில் உள்ள மக்களுக்கு கூடாரங்களை அனுப்புவதற்கும் உணவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கும். நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும், சுகாதார மருத்துவ வசதிகளையும் வழங்குவதற்கும் பிரான்ஸ் மருத்துவக் குழுவினரையும் சுகாதார திணைக்கள ஊழியர்களையும் அனுப்புவதற்கும் அரசாங்க அதிபர் தன்னாலான முழு முயற்சிகளையும் எடுத்து வருகின்றார். இருந்த போதும் அங்கும் இங்கும் சிதறி வாழும் மக்களுக்கு இவ் உதவிகள் எப்படி சென்றடையப் போகின்றன? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும், உதவிகள் தொடர்ந்தாலும்,இம் மக்கள் தொடர்ந்தும் காடுகளில் தான் வாழ்வதா? தமது சொந்த இடங்களுக்கு செல்லக் கூடிய நிலை எப்போது உருவாகும். இதனை யார் உருவாக்குவது என்ற வினாக்களே தொடர்ந்து எழுகின்றன.

**- எஸ். கே. குமரகுரு**

(மட்டக்களப்பு நிருபர்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூறு கோடி டாலர் உதவி வழங்க உதவி வழங்கும் நாடுகள் இணக்கம்

## எதிர்கால உதவி மனித உரிமைகள் விடயத்தில் தங்கியுள்ளதாகவும் எச்சரிக்கை

பாரிஸ், அக். 25,

இலங்கையின் பிரச்சினைக்குரிய பொருளாதாரத்தை மீட்க நிதியுதவி அளிக்க உதவி வழங்கும் நாடுகள் இணங்கியுள்ள போதிலும் எதிர்கால உதவிகள் நாட்டின் மனித உரிமை தொடர்பான நிலைப்பாட்டில் தங்கியுள்ளது என எச்சரிக்கை விடுத்தன.

1991ஆம் ஆண்டுக்கான உதவியாக 100 கோடி டாலர்களை வழங்க மேற்கின் உதவி வழங்கும் நாடுகளும் ஜப்பானும் பாரிஸில் நடந்த கூட்டத்தில் இணங்கியதாக உலக வங்கி அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதிகள் மனித உரிமைகள் மீறல் தொடர்பான அறிக்கைகள் குறித்தும் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட பகைமை நடவடிக்கை குறித்தும் தமது அரசாங்கங்களின் கவலையை வெளியிட்டனர்.

இலங்கையில் மனித உரிமை மீதான மீறல்கள் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட ஐரோப்பிய சமூகம் எதிர்கால உதவிகள் விடயத்தில் இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவித்துள்ளதாக உலக வங்கி கூறியது.

இக்கூட்டத்தில் வெளியிடப்பட்ட கவலைகள் குறித்து இலங்கை அரசு கவனமெடுத்தது டன் மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேச கடப்பாடுகளை அது மேற்கொள்ளுமெனவும் உறுதி அளித்தது.

இலங்கைக் குழுவிற்கு தலைமை தாங்கிய பிரதமர் டி. பி. விஜேதுங்க அங்கு பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்,

மனித உரிமைகளை மேம்படுத்த தமது அரசு அரசியலமைப்பு சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் தமது நாட்டில் கொடுமைகள் தொடர்பாக வெளிவரும் வெளிநாட்டுச் செய்திகள் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் தெரிவித்தார்.

[illegible]

வழங்கும் நாடுகள் பாதுகாப்பு செலவினம் மற்றும் அரச மானியங்களை குறைக்குமாறு வலியுறுத்தின.

வளைகுடா நெருக்கடியால் விளைந்திருக்கும் கொடுப்பனவு மீதிகளை சரி செய்யும் திட்டத்திற்காக தமது நாட்டிற்கு பெருமளவுபணம்தேவைப்படுவதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பினால் வருடாந்தம் மூன்று முதல் 4 கோடி டாலர்களை இலங்கை இழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வருடம் எண்ணெய்க்காக மேலதிகம் 30 கோடி டாலர்கள் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.



# ‘அநேக சிங்களவர் தமிழரின் உரிமையை எதிர்ப்பவரல்லர்’

## வாசுதேவ சொல்கிறார்

தலவாக்கொலை,

சிங்கள மக்களில் பெரும்பாலானோர் தமிழர் உரிமைகளை எதிர்ப்பவர்கள் அல்ல இதனால் சிங்கள இனவாதம் முற்றாக இல்லை என்று கூறவில்லை. சிங்கள மக்கள் முன் சரியான முறையில் இடதுசாரிகள் பிரச்சினைகளை எடுத்துச் செல்லவில்லை.

இவ்வாறு அண்மையில் தலவாக்கொல்லை லிந்துல நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற நவசமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றிய வாசுதேவ நாணயக்கார கூறினார்.

நவசமசமாஜக்கட்சியின் தலவாக்கொல்லை மாவட்ட அமைப்பாளர் எஸ்.மோகன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கியதேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தென்னிலங்கை சிங்கள பௌத்தத்தை வளர்த்தன. வலதுசாரிகளுக்கெதிரான இடதுசாரிகள் தோற்கடிக்கப்பட்டனர். இன ரீதியிலான உறவுகள் அதிகரித்தன.

1970 இல் இருந்து சமசமாஜக்கட்சிக்குள் உட்கட்சி [illegible]தது. சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் செய்த தவறுகளால் 1977 இல் நவசமசமாஜக்கட்சி உதயமானது.

நான் போட்டியிட்ட எகலியகொட தேர்தல் தொகுதி சிங்கள பௌத்த மக்கள் நிறைந்தது. மலையகத்திலுள்ள தமிழர்கள் தாம் விரும்பும் குடியுரிமை பெற வழி செய்யப்பட வேண்டும் என்வும் வடகிழக்கு தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் அங்கு நாம் எடுத்துச் சொன்னோம். சொற்ப வாக்குகள் எண்ணிக்கையில் வெற்றி வாய்ப்பு கிடைக்காமல் போனாலும் கூட அங்குள்ள மக்கள் அதனை அங்கீகரித்தார்கள். வெற்றி தோல்விகளுக்காக நாம் கொள்கைகளை இடத்துக்கிடம் மாற்றுவதில்லை.

வட-கிழக்கு மக்கள் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் ஆதரவு இல்லை என நினைத்தனர். இணைந்து போராட முடியாது என நினைத்து தனித்து போராட்டம் நடத்துகின்றனர்.

# ‘ஒருசில மாணவரின் சுயநல போக்கு கவலைக்குரியது’

## யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சி கழகம் கூறுகிறது

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் தங்களுக்கு தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் தொடங்கப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளனர். இது மிகவும் வேதனைக்குரியது. வட-கிழக்கில் வாழும் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது தமது சுயநலன்களையே கவனிக்கும் இந்த ஒரு சில மாணவர்களால் முழு மாணவ சமுதாயமுமே பாதிப்புக்குள்ளாக நேரிடும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கவலை தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மாணவரின் பல்கலைக்கழகங்களான யாழ். பல்கலைக்கழகமும், கிழக்கு பல்கலைக்கழகமும் அப்படியே அழிந்து போகும் நிலையிலுள்ளன. இதன் பிரதிபலிப்புத்தான் அண்மையில் வெளியிடப்பட்ட ‘யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தும்பறை வளாகத்திற்கு மாற்றம் பெறலாம்’ என்ற அறிவிப்பாகும்.

பலத்த சிரமத்தின் மத்தியில் பெறப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தையும், கிழக்கு பல்கலைக்கழகத்தையும் அழிய விடுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் பண்பாடு, மொழி ஆகியவற்றைச் சிதைக்கலாமென்ற நோக்கத்தை முறியடிக்க கல்விப் பாரம்பரியத்தில் பற்றுக் கொண்ட அனைவரும் முன்வர வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "இந்தியாவுடன் நட்புறவை ஏற்படுத்தி இனப்பிரச்சினையைத் தீருங்கள்" -அத்தாவுட

(எம்.பி.எம். அஸ்ஹர், வீ. தனபாலசிங்கம்)

'மொஸாட்' பற்றி விசாரிக்க துரிதமாக செயல்பட்டு ஆணைக்குழு ஒன்றை நியமித்தீர்கள். அந்த குழு இன்று என்ன செய்கிறது? அதற்கு காரியாலயம் கூட இல்லை. அமைச்சர் லலித் அத்துலத்முதலியையும் திரு. காமினி திசாநாயகவையும் பாட்டவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என திரு. அத்தாவுட செனவிரத்ன நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

அரபு நாடுகளை ஏமாற்றுவதற்காக மொஸாட் விசாரணைக்குழு அமைக்கப்பட்டதாக ஆகிவிடக்கூடாது. இந்த விசாரணையைத் துரிதப்படுத்தி நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ஐ.சோ.மு. எம். பியான திரு. செனவிரத்ன மேலும் தெரிவித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன்துறையில் இராணுவ வீரர் மரணம்!

## மாங்குளத்தில் 4 பேர் பலி

(பால. விவேகானந்தா)

மாங்குளத்தில் புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அந்த நால்வரும் புலிகள் என சந்தேகிக்கப்படுவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவத்தில் மேலும் ஐவர் காயமடைந்தனர்.

காங்கேசன்துறையில் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் காவலில் இருந்த இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

# 'எம்மவரை க[illegible]டிலோம் எங்கு[illegible] சொல்லுங்களம்மா'

## அகதிமுகாம் பெண்களின் கண்ணீர் கண்டு சிங்களப் பெண்டிர் அழுகை

[illegible]

படங்களைக் காட்டி அவர்களை மீட்டுத் தரும்படி கெஞ்சி அழுத போது, திருமதி டன்சித சில்வாவும், திருமதி ரூபா குமாரணதுங்கவும் கண்ணீர் விட்டனர்.

அகதிமுகாம் பெண்களின் வேண்டுகோளை, புளொட் முக்கியஸ்தர் மாணிக்கதாசன் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

திருமதி டன்சித சில்வா இங்குள்ள நிலைமை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தற்போது இடம்பெறும் யுத்தத்தினால் பலர்கொல்லப்பட்டும், சொத்துக்கள் அழிந்தும் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. அரசும், புலிகளுமே இதற்குக் காரணம். அவர்களே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

'இது தீர்க்க முடியாத பிரச்சினை அல்ல. அரசியல் ரீதியில் அணுகினால் நிச்சயம் தீர்த்து வைக்க முடியும். அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளால் தமிழ் மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

நான் சென்ற எல்லா அகதிமுகாம்களிலும்பெண்கள் அழுதபடியும், காணாமல் போனோரை மீட்டுத் தரும்படியும் கேட்டனர். இத்தகைய நிலைமை தென்னிலங்கையிலும் காணப்படுகிறது.

நாம் இங்கு அவதானித்தவற்றையும், கேட்டவற்றையும் முதலில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதுடன் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு வருவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

வெளியீடு: ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
பிரான்சுக் கிளை.